| O.S.No. 06/2025 | PW2: திரு. ஜானகிராமன் த/பெ. திரு. ஏழுமலை | 29-06-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. 1993–ல் வாதிக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் காலத்தில் என்னுடைய வயது 15 ஆகும். நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பட்டாவிற்கும் ஒப்படைவு நமூனாவிற்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி ஆதிதிராவிடம் வகுப்பை சேர்ந்தவரா என்றால் இல்லை. அவர் MBC வகுப்பை சேர்ந்தவர். சட்டப்பூர்வமாக பாத்தியப்பட்டது என சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதி எந்த வகையான வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் 2 அறைகளைக் கொண்ட சிமெண்ட் ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார். அந்த வீட்டிற்கு பல வருடங்களாக தண்ணீர் வசதி உள்ளது. மின்சார வசதி இல்லது, அதை போடும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது. வாதிக்கு ரேஷன் அட்டை எந்த வீட்டு முகரிக்கு உள்ளது என்றால் உக்கல் முகவரியில் உள்ளது. நான் கூழமந்தல் கிராமத்தில் வசிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் வாதியின் மருமகனுக்கு நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்கிறேன்.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/– ஜானகிராமன்
சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.06.29 12:46:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**